### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டப் பேரவையின் நடைமுறை விதி 6 (1)-க்கு இணங்க இக்கூட்டத் தொடரில் மாற்றுத் தலைவர்களாக ஆகியோரை நான்

1. திரு. நா. வீராசாமி.
2. திரு. கே. ஆர். கோவிந்தன்.
3. திரு. எஸ். இராமலிங்கம்.
4. திரு. எஸ். சிவசுப்பிரமணியன்.
5. திரு. எஸ். முத்துலிங்கம்.
6. திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி.

நியமித்துள்ளேன்.

### (இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு—கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு—கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

### 6. அரசினர் மசோதாக்கள்.

### (அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு—கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு—கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இம் மசோதாவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.